### தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளை சார்பாக,

# கல்வி, மருத்துவ சிகிச்சைக்காக 15 பேருக்கு நிதியுதவி!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!






சென்னை,ஜன.28-

சென்னையில், தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளை சார்பாக,

கல்வி, மருத்துவ சிகிச்சைக்காக 15 பேருக்கு நிதியுதவியைத் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.

**நன்கொடைகள்**

தி.மு.கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளராக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றதில் இருந்து, இளைஞர் அணி அறக்கட்டளைக்குக் கழகத்தினரும், கழக நிர்வாகிகள் பலரும் நன்கொடை வழங்கி வருகின்றனர். இவ்வாறு வழங்கப்பட்ட நிதி வங்கியில் நிரந்தர வைப்புத் தொகையாக சேமித்து வைக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் கிடைக்கும் வட்டித்தொகையை கழகத்தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் பேரில், ஏழை- எளிய மக்களின் கல்வி- மருத்துவ சிகிச்சைக்காக, மாதந்தோறும் நன்கொடையாக வழங்கி வருகிறது, இளைஞர் அணி.

அந்த வகையில், 2025, ஜனவரி மாதத்திற்கான நிதி உதவியாக, பயனாளிகள் 15 பேருக்கு 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய், கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களால் நேற்று (27.01.2025) வழங்கப்பட்டது.

**கல்விச் செலவுகள்**

இதில் கிர்கிஸ்தான் நாட்டிற்கு மருத்துவம் படிக்கச் சென்ற தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த ஸ்ரீமதி, பிலிப்பைன்ஸ் நாட்டிற்கு மருத்துவம் படிக்கச் சென்ற ஸ்ரீநிதா மற்றும் ஸ்ரீநிஜா, கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி மாணவர் பிரஜேஷ் உள்ளிட்ட 10 பேருக்கு கல்விச் செலவுகளுக்கான நிதியுதவிகள் வழங்கப்பட்டன.

தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த க.பாஸ்கர், திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த இந்திரஜித் ஆதவன், பொள்ளாச்சியைச் சேர்ந்த ஹர்சிக் உள்ளிட்ட 6 பேருக்கு மருத்துவ சிகிச்சைக்கான உதவித்தொகைகளை உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

**பங்கேற்றவர்கள்**

இந்நிகழ்ச்சியில் தி.மு.கழக இளைஞர் அணியின் மாநில துணைச் செயலாளர்கள் ஜோயல், இன்பா ரகு, ஜி.பி.ராஜா, சீனிவாசன், பிரபு கஜேந்திரன், சட்டமன்ற உறுப்பினர் பிரபாகர் ராஜா,

மாவட்ட அமைப்பாளர்கள் தங்கராஜ், சபரி கார்த்திகேயன், ஹக்கீம், சிவகுரு, வெங்கடேஸ்வரன், லோகேஷ், சுரேஷ்குமார், பாலாஜி, முகில் வேந்தன், ஜெயக்குமார் துணை அமைப்பாளர்கள் கோவை பாபு, உதய பூபதி, தனசேகரன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

### மாமல்லபுரத்தில் ஒரே நேரத்தில்

# 500 கலைஞர்கள் பங்கேற்ற நாட்டிய சங்கம விழா!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தொடங்கி வைத்தார்!

மாமல்லபுரம், ஜன.28-

மாமல்லபுரத்தில் ஒரே நேரத்தில் 500 கலைஞர்கள் பங்கேற்ற பிரமாண்ட நாட்டிய சங்கம விழாவை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் சார்பில் ஒரே நேரத்தில் 500 கிராமிய, பரத நாட்டிய கலைஞர்கள் பங்கேற்ற நாட்டிய சங்கம விழா செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரம் கடற்கரை கோவில் வளாகத்தில் திறந்த வெளி மேடையில் நடைபெற்றது.

இதற்கு தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்ற தலைவர் வாகை சந்திரசேகர் தலைமை தாங்கினார். தமிழ்நாடு இயல், இசை நாடக மன்ற உறுப்பினர் - செயலர் விஜயாதாயன்பன் வரவேற்றார். தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி முருகன், தமிழ்நாடு இயல், இசை நாடக மன்ற பொதுக்குழு உறுப்பினர் ஸ்ரீநிதி சிதம்பரம், மாமல்லபுரம் சுற்றுலா அலுவலர் எஸ்.சக்திவேல், மாமல்லபுரம் பேரூராட்சி கவுன்சிலர் மோகன்குமார் விசுவநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் கலந்துகொண்டு 500 கலைஞர்கள் பங்கேற்ற நாட்டிய சங்கம விழாவை தொடங்கி வைத்து, நாட்டிய கலைஞர்களுக்கு நினைவு பரிசுகள் வழங்கி கவுரவித்தார்.

விழாவில் கரகாட்டம், காவடியாட்டம், ஒயிலாட்டம், மயிலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், கட்டைக்கூத்து, நையாண்டி மேளம், பம்பையாட்டம், தெருக்கூத்து, தப்பாட்டம், பறைஇசை, நாதஸ்வரம் போன்ற கிராமிய கலைஞர்கள் 250 பேர், பரத நாட்டிய கலைஞர்கள் 250 பேர் என ஒரே நேரத்தில் 500 கலைஞர்கள் திறந்தவெளி மேடையில் பங்கேற்று கலைநிகழ்ச்சிகளை நடத்தி சங்கமித்தனர். இதை ஏராளமான வெளிநாட்டு, உள்நாட்டு பயணிகள் கண்டுகளித்து ரசித்தனர்.

நிகழ்ச்சியில் அருங்காட்சியகங்கள் துறை இயக்குனர் கவி தாராமு, மாமல்லபுரம் முன்னாள் பேரூராட்சி தலைவர் விசுவநாதன், மாமல்லபுரம் பேரூராட்சி செயல் அலுவலர் சந்திரகுமார், மாமல்லபுரம் பேரூராட்சி கவுன்சிலர் பி.எஸ்.பூபதி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.




திருவள்ளூர் கிழக்கு மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அறிமுக கூட்டம் மற்றும் சமூக வலைதளப் பயிற்சி மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.வி.லோகேஷ் வரவேற்புரையில் மாவட்ட செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. மாநில இளைஞரணி அணி துணை செயலாளர் ப.அப்துல் மாலிக், தலைமை செய்தி தொடர்பாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி, கலைஞர் தொலைகாட்சி துணை ஆசிரியர் வரவணை செந்தில் சிறப்புரையாற்றினர். நிகழ்ச்சியில் ஜெ.மூர்த்தி, மு.பகலவன், மு.கதிரவன், கே.வி.ஜி.உமாமகேஷ்வரி, எஸ்.ரமேஷ், ஏ.வி.ராமமூர்த்தி, பி.வெங்கடாசலபதி, பா.செ.குணசேகர் டாக்டர்.பரிமளம்விஸ்வநாதன், ஆ.சத்தியவேல், மு.மணிபாலன், கி.வே.ஆனந்தகுமார், ஜான்(எ) பொன்னுசாமி, ந.பரிமளம், நா.செல்வசேகரன், கா.சு.ஜெகதீசன், ஜி.ரவிக்குமார், அபிராமிகுமரவேல், இரா.அறிவழகன், பி.முத்து, க.சு.தமிழ்உதயன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஜெ.மோகன்பாபு, எம்.முரளிதரன், டி.சங்கர், செ.யுவராஜ், இரா.கதிரவன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

### தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில், மருத்துவம் மற்றும் கல்வி உதவித் தொகையாக பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 15 பேருக்கு

கழக இளைஞர் அணிச் செயலாளர் – மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் இன்று **ரூ.7,50,000/–** வழங்கினார்.

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட தி.மு.க. இளைஞர் அணியின் பெயரில், செயல்பட்டு வரும் அறக்கட்டளை தொடர்ந்து மாதந்தோறும் பல்வேறு உதவிகளைச் செய்து வருகிறது. அந்த வகையில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இளைஞர் அணிச் செயலாளராகப் பொறுப்பேற்றதில் இருந்து கழக நிகழ்ச்சிகளுக்குச் செல்லும்போதெல்லாம் நிர்வாகிகளும் உடன்பிறப்புகளும், இளைஞர் அணியினரும் அளிக்கும் நன்கொடைகளைக் கொண்டு, கல்வி, மருத்துவம் மற்றும் கழக முன்னோடிகளுக்கான நிதி உதவியாக, பல்வேறு உதவிகளை அறக்கட்டளை மூலம் மேற்கொண்டு வருகிறது.

பொதுமக்களைச் சந்திக்கும்போது பெறப்படும் மனுக்களை ஆய்வு செய்து, மாவட்டக் கழகச் செயலாளர் மற்றும் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்களிடம் இருந்து பரிந்துரைக் கடிதங்களைப் பெற்று, நிதி உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில், கழக இளைஞர் அணிச் செயலாளர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 15 பேருக்கு, ஜனவரி மாதத்திற்கான கல்வி மற்றும் மருத்துவத் தேவைகளுக்கான நிதி உதவிகளைக் காசோலைகளாக வழங்கினார்.

| வ. எண் | ஜனவரி மாதத்திற்கான நிதி உதவியைப் பெற்றவர்கள் விவரம் |
|---|---|
| 1 | இந்திரஜித் ஆதவன், 8/68–ஏ, பஜனை கோவில் வீதி, அவினாசி கவுண்டம்பாளையம், 15–வது வார்டு, திருப்பூர் மாநகரம், திருப்பூர். |
| 2 | ஸ்ரீ மதி, பே.தாதம்பட்டி, பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், தருமபுரி. |
| 3 | மாயவண்ணன், 20, கோவில்பாளையம் ரோடு, காளியப்பம்பாளையம், பெரிய நெகமம், பொள்ளாச்சி, கோயம்புத்தூர் – 642 120 |
| 4 | ர.ஹர்சிக், த/பெ. ரகுபதி, 7/8, ஆதி திராவிடர் தெரு, தாராபுரம் ரோடு, பெரிய நெகமம், பொள்ளாச்சி, கோயம்புத்தூர் – 642 120 |
| 5 | ம.பிரஜேஷ், த/பெ. மகேந்திரன், 10–டி, டி.எஸ்.கே. நகர், இருகூர், சூலூர், கோயம்புத்தூர் – 641 103 |
| 6 | சு.நாகராஜ், 17/46, முத்துச்சாமி உடையார் வீதி, குனியமுத்தூர், கோயம்புத்தூர் – 641 006 |
| 7 | ச.ஹேமந்த், 3/51, சக்தி நகர், ஒன்னிப்பாளையம், பிளிச்சி அஞ்சல், கோயம்புத்தூர் – 641 019 |
| 8 | சீ.குபேந்திரன், த/பெ. சீனிவாசன், 4, வரசித்தி விநாயகர் நகர், மீஞ்சூர், பொன்னேரி (தா), திருவள்ளூர் – 641 203 |
| 9 | க.பாஸ்கர், த/பெ. கணேசன், 230, வடக்குத்தெரு, கீழத்திருப்பூந்துருத்தி அஞ்சல், திருவையாறு (தா), தஞ்சாவூர் – 613 013 |
| 10 | கிரிஜாஸ்ரீ, 21–ஏ, ராஜாராம் 3–வது வீதி, பட்டரவாக்கம், சென்னை |
| 11 | ர.அஸ்வினி, த/பெ. ரவி, 1/201–ஏ, அண்ணா நகர், பருவதனஹள்ளி, பென்னாகரம் வட்டம், தருமபுரி – 636 813 |
| 12 | இந்துமதி, 22, பஜார் தெரு, கே.கே. நகர் மேற்கு, சென்னை – 600 078 |
| 13 | ப.கோபாலகிருஷ்ணன், 23–ஏ, மதுரை வீரன் தெரு, காளிப்பட்டி, நாமக்கல் – 637 501 |
| 14 | தேவிகா, 4. முதல் மெயின் ரோடு, செல்வராஜ் நகர், திருநின்றவூர், திருவள்ளூர் – 602 024 |
| 15 | கே.டி.வர்ஷா, 10/11, விஜயலட்சுமி நகர், கிரிஜா நகர், கொளத்தூர், சென்னை – 600 099 |



"அன்பகம்"
சென்னை – 18.
நாள் : 27–01–2025.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 1–இல், இரண்டு சட்டமன்றத் தொகுதிகளில் சமூக வலைத்தளப் பயிற்சி, கீழ்க்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 28.01.2025 செவ்வாய்க்கிழமை | மாலை 4.00 மணி | 1 | மயிலாப்பூர் | சமுக நலக்கூடம், கே.பி.தாசன் சாலை, தேனாம்பேட்டை, சென்னை. |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல், இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 25-01-2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி